# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, UDUMALPET

Sessions CASE No : 126/2016

Deposition of Witness for : P.W. 15

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர். யோகலட்சுமி | Calling | |
| Father's Name | : | Taluk | : |
| Age | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 18.10.2023

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது ைஹதராபாத்தில் உள்ள ஸ்டார் ஹாஸ்பிடலில் வேலை பார்த்து வருகிறேன். 2015 ம் ஆண்டு தாராபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 05.02.2015 அன்று மாலை 3.10 மணியளவில் தாராபுரம் காவல்நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனின் பேரில் பாலாஜி (எ) பாலசுப்பிரமணியம் என்பவரது பிரேதத்தை நான் பிரேத பரிசோதனை செய்தேன். பிரேதபரிசோதனையின் போது அவரது பிரேதத்தில் பின்மண்டை, நடுமண்டை, மற்றும் இடது, வலது புற மண்டையில் வெட்டுக்காயம் உள்ளது எனவும், கழுத்தில் இடது மற்றும் வலது பக்கத்தில் இறுக்கியது போன்ற அடையாளக்குறி உள்ளது என்றும், மண்டை ஓட்டின் எலும்பில் முறிவுகள் உள்ளது என்றும் மண்டைஓடு முழுவதும் சேதமடைந்த நிலையில் உள்ளது என்றும், மூளையின் உள்ளே ரத்தக்கசிவு உள்ளது என்றும் பிரேதபரிசோதனை சான்றிதழ் வழங்கினேன். மேலும் இறப்பிற்கு காரணமாக மூச்சுத்திணறல் மற்றும் முக்கியமான

உறுப்பான மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவும் காரணம் எனவும் சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 16, எனது இறுதி கருத்துரை அ.சா.ஆ 17, இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் பிரேதத்தை நேரடியாக என்னிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். திரு.ராஜன் என்ற காவலர் எனக்கு இறந்தவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினார். அப்போது 3 ம் நபர்கள் யாரும் அங்கு இருக்கவில்லை என்றால் சரிதான். நான் பிரேதப் பரிசோதனை செய்வதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்னர் அந்த நபர் இறந்திருப்பார் என்பதை பிரேதபரிசோதனை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உள்உறுப்புகள் சம்பந்தமாக ஆய்வுக்கு அனுப்பப்பட்டு அதன் அறிக்கையை நான் பெற்றேன். வயிற்று பகுதியில் 50 மி.லி ஜீரணமான உணவுப்பொருட்கள் எடுக்கப்பட்டிருந்தது. அதில் விஷவாடையோ அல்லது மது வாடையோ இல்லை என அறிக்கை வந்தது என்றால் சரிதான். ஒரு நபர் இறப்பதற்கு சுமார் 12 மணிநேரத்திற்கு முன்னர் விஷம் கலந்த பொருளை உட்கொண்டிருந்தால் அது உள்உறுப்புகள் ஆய்வின்போது தெரியவரும் என்றால் எல்லா விஷம் கலந்த பொருட்களையும் உள்உறுப்பு ஆய்வின்போது கண்டறிய இயலாது. குரல்வளை எலும்பை உள்உறுப்பு ஆய்விற்கு நான் அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். அதற்கான அறிக்கையையும் நான் பெற்றேன். குரல்வளை பாதிப்படையவில்லை என அறிக்கை வந்தது என்றால் சரிதான். கயிறு அல்லது பெல்ட் போன்ற பொருட்களை வைத்து கழுத்தை இறுக்கும்போது குரல்வளை எலும்பு சேதமடையுமா என்றால் எல்லா சூழ்நிலையிலும் அவ்வாறு ஏற்பட வாய்ப்பு இல்லை. மூச்சுத்திணறலுக்கு

பல்வேறு காரணம் என்று அ.சா.ஆ 17 ல் நான் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. மோசமான சாலைவிபத்தில் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. ஒரு உயரமான இடத்தில் இருந்து கரடுமுரடாண பகுதியில் விழும்போது இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டா என்றால் மண்டையில் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு ஆனால் வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

**1 மற்றும் 2ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ள கேட்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct..................

Additional Sessions Judge
Udumalpet